1. 4.20 மணி என்பதனை _____ எனப் படிக்கலாம்.

அ) 3 மணி கடந்து 20 நிமிடங்கள் ஆ) 20 மணி கடந்து 4 நிமிடங்கள்

இ) 4 மணிக்கு 20 நிமிடங்கள் ஈ) 4 மணி கடந்து 20 நிமிடங்கள்

2. ஒரு கடைக்காரர் 85லி. தேங்காய் எண்ணெய் வாங்கினார். அதில் அவர் 62லி. 300மிலி. எண்ணெய் விற்று விட்டார், எனில் மீதம் உள்ள எண்ணெயின் அளவு __

அ) 22லி. 300மிலி. ஆ) 22லி 700மிலி.

இ) 23லி. 700மிலி. ஈ) 23லி. 300மிலி.

3. ஸ்ரீதேவியின் பிறந்த நாள் 01.01.2012 எனில் 01.06.2018 அன்றுள்ள படி அவளின் வயது 6 வருடம் 5 மாதங்கள்.

4. ஒரு எலுமிச்சை பழச்சாறு தயாரிக்க 250மிலி தண்ணீர், 20கி சர்க்கரை மற்றும் 5மிலி எலுமிச்சைச்சாறு தேவைப்படுகிறது எனில், அதே போல 6 பேருக்குப் பழச்சாறு தயாரிக்க 1250 மிலி தண்ணீர், 120கி சர்க்கரை மற்றும் 30மிலி எலுமிச்சைச்சாறு தேவைப்படும்.

5. 2000 ஆம் ஆண்டுக்கும் 2018 ஆம் ஆண்டுக்கும் இடையில் 4 லீப் ஆண்டுகள் உள்ளன.

6. காலையில் ஒருவர் தனது வீட்டிலிருந்து பூங்காவை அடைய 2 கி.மீ. 300 மீ. தூரம் பயணம் செய்தார். அவர் மாற்றுப்பாதையில், பூங்காவிலிருந்து வீடு திரும்ப காலையில் சென்ற பாதையின் தூரத்தை விட 750 மீ. கூடுதலாகப் பயணித்தார் எனில், அவர் பயணித்த மொத்த தூரம் எவ்வளவு?

அ) 3 கி.மீ. 750 மீ. ஆ) 5 கி.மீ. 350 மீ.

இ) 2 கி.மீ. 750 மீ. ஈ) 5 கி.மீ. 50 மீ.


LIVEWORKSHEETS

7. கமல் 4 மீ. 80 செ.மீ. தூரம் தாண்டினார். மோகன் கமலை விட 25 செ.மீ. தூரம் கூடுதலாகத் தாண்டினார் எனில், மோகன் தாண்டிய தூரம் 5 மீ. 50 செ.மீ.

8. ராஜீவ் ஒவ்வொன்றும் 1 மீ. 70 செ.மீ. நீளமுள்ள மூன்று மேல் சட்டை துணி வாங்கினார் எனில், மொத்த துணியின் நீளம் ___

9. மாணிக்கம் காலையில் 45 நிமிடங்கள் நடைபயிற்சியும், 20 நிமிடங்கள் சிறு ஓட்டமும் மற்றும் 15 நிமிடங்கள் உடற்பயிற்சியும் செய்கிறார் எனில், காலையில் புத்துணர்ச்சி பெற செலவிட்ட நேரம் 1 மணி 10 நிமிடங்கள்.

10. ஒரு விவசாயி 3 ஏக்கருக்குத் தேவையான 162 கி.கி. நெல் விதையை வைத்திருக்கிறார் எனில், 1 ஏக்கருக்குத் தேவையான நெல்விதை (கிராமில்)

அ) 50000 கி. ஆ) 5400 கி. இ) 54000 கி. ஈ) 64000 கி.


LIVEWORKSHEETS